தேசிய சாதனை நாயகி -ரீங்காரக் கவிதாயினி

பரந்தன் டிவனியாவின்

# வைகறை வரிகள்...



விடியலின் விளக்கம்
நம்பிக்கையின் முழக்கம்
சாதனையின் மகுடம்
வைகறை வரிகளின் வைரம்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை நாயகி

ரீங்காரக் கவிதாயினி

பரந்தன் டிவனியாவின்

வைகறை வரிகள்...

விடியலின் விளக்கம்

நம்பிக்கையின் முழக்கம்

சாதனையின் மகுடம்

வைகறை வரிகளின் வைரம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| கவிதைகள் | பக்கம் |
|---|---|
| 01. சூரியன் - FM | 01 |
| 02. அப்பா | 03 |
| 03. அம்மா | 04 |
| 04 எழுதுகோல்களால் தொடங்கியது யாகம் | 05 |
| 05. பந்து | 07 |
| 06. அவன்மட்டும் | 08 |
| 07. ஆசையில் ஓர் கடிதம் | 09 |
| 08. பேனாமுனை | 10 |
| 09. உண்மையே வெல்லும் | 11 |
| 10. தேவை | 12 |
| 11. சொல் ஒன்று செயல் ஒன்று | 13 |
| 12. வலைவீச்சு | 14 |
| 13. இப்படியானவர்கள் | 16 |
| 14. சொன்னால்தான் காதலா | 18 |
| 15. பாட்டு | 19 |
| 16. ஆடை | 21 |
| 17. முற்றுப்புள்ளி | 22 |
| 18. கண்ணீர்க்கடல், பசி, காற்று, காதல் வானம் | 24 |
| 19. வாழ்வின் பொருள் என்ன | 25 |
| 20. வரம் | 27 |
| 21. மாலை | 29 |
| 22. நான்,நீ,நாம்,எங்கள் | 31 |
| 23. உங்கள்,சாதனை, இலக்கு, கல்வி, உண்மை | 32 |
| 24. புதியது புதியதே | 33 |
| 25. சிந்து | 36 |
| 26. வசப்படமாட்டாயா | 37 |
| 27. அறணை | 38 |
| 28. யார் அவன் | 39 |
| 29. ஒன்றே | 41 |
| 30. நிலவு பேசுகிறது | 43 |
| 31. தேற்றம் | 44 |
| 32. வர்ணஜாலம் | 45 |
| 33. முக்கியத்துவம் | 47 |
| 34. எல்லாம் பொய் முகங்கள் | 49 |
| 35. கிட்டதாயின் வெட்டன மற | 51 |
| 36. மறப்பதற்கா மாறுதல்கள் | 52 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்:- வைகறை வரிகள்...

பாகம்:- 1

ஆக்கம்:- டிவனியா நிலூசினி மான்ன்

முதல்பதிப்பு:- 24/09/2011

பதிப்புரிமை:- ஆசிரியர்கே (டிவனியா நிலூசினி மான்ன் பரந்தன், கிளிநொச்சி.)

அச்சுப்பதிப்பு:- வேழன் பதிப்பகம் கிளிநொச்சி.

விலை:- 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



செந்தமிழ் உமிழ்ந்து
வெண்புறா கவிழ்ந்தது..
பைந்தமிழ் எழுந்து
வெண்தணல் சூழ்ந்தது..
எம் தமிழ் எழுதத் துடித்து
உள்ளுணர்வுகளை
கவிவடிக்க நினைத்து
என் கவி யார் படிப்பார்
என பயந்து பல கவிஞர்கள் கவிகள் புதைகிறது...
பல நிஜங்கள் மனச்சிறைக்குள் சிக்கித் தவிக்கிறது...
என் கவிகளை கருத்தை வெளியிட முடியாமல்
தவிக்கும் கவிஞர்களுக்கும்
எழுதியவைகளை ஏடாக்க முடியாமல்
துடிக்கும் கவிஞர்களுக்கும் எம்
எதிர்கால விதைகளுக்கும் சமர்ப்பிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

தமிழ் பேசும் நல்லுலகில் கவிபாட எல்லோரும் ஆரம்பித்துள்ளார்கள். வைபவங்கள் பலவற்றில் கவியழகன் வரவேற்புரை, வாழ்த்துரை எனபலவற்றை வழங்குகிறார்கள். பள்ளிகளிலே மாணவர்களுக்கு கவிதை வரிகளையாக்க ஆசான்கள் முனைகிறார்கள். இப்போது ஒரு படிமேல் உயர்ந்து செவிக்கு விருந்தளிக்கும் வானொலி நிகழ்வுகள் மூலம் தமிழ்க் கவிதை வளர பல நிகழ்வுகளை முனைப்புடன் முன்னெடுக்கிறார் கள். கடந்த தசாப்தத்தில் எழுதப்பட்ட கவிவரிகள் எண்ணில் அடங்கா இவையெல்லாம் தமிழ் அழியாது வளர்கிறது என்பதை காட்டுகிறது. ஒவ்வொரு நாள் பத்திரிகைகளிலும் கவி வரிகள் பூத்துக் குலுங்குகின்றன. எம் மக்களின் கற்பனைத்திறன் வியப்பூட்டும் பல ஆழ்ந்து விரிந்து பரந்து சென்றுள்ளது. ஒரு வரியில் கவியாக்கி மலையைப் பிளக்கிறார்கள். சொற்களை அடுக்கியும் கோவையாக்கியும் மேலும் கீழும் எழுதியும் கவி பாடி நயம் படைத்துள்ளார்கள்.

இவ்வேளையிலேயே எழுத்தோடு ஓசையும் கோர்த்து வானொலியிலே தவழ்ந்து வரும் ரீங்கார நிகழ்வின் கவிவரிகள் படைப்பாளிகளின் ஓசை நயமும் எமது செவிகளுக்கு விருந்தளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான படைப்பாளிகளில் வி. டிவனியா நிலூசினியும் ஒருவர். பரந்தன் மண்ணில் வயலுடன் சேர்ந்து வாழும் டிவனியா தனது கற்பனைகளையும் நிஜங்களையும் ஒவ்வொன்றாக கோர்த்து இசை நயத்துடன் படித்தும் காட்டியுள்ளார்.

இவர் பன்முக ஆளுமை கொண்ட இளஞ்சிட்டு தனது சொல் வலிமையால் இப் படைப்பை கொண்டு வந்தவர் உடல் வலிமையால் பல சாதனைகளையும் புரிந்துள்ளார். இவரது தடகள ஆற்றல் பலராலும் பேசப்படும் விடயம் இதற்கூடாக பல சாதனைகளையும் எட்டியுள்ளார்.

இக்கவிதைத் தொகுப்பூடாக இவர் மேலும் ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளார் இவரது படைப்பாற்றல் மேலும் தொடர வளர என் ஆசிகள் உரித்தாகுக...

நன்றி.
திரு.த. குருகுலராசா
ஓய்வுநிலை கல்விப்பணிப்பாளர்
தருமபுரம்
15.09.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வைகறை விழயலுக்கு" தொகுப்புக் கூறுவதில் பெருமையுடன் மகிழ்வும் அடைகின்றேன்.



"இன்னவைதானம் கவி எழுத
ஏற்ற பொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச் சொல்லாதீர்
சோலை கடல் மின்னல் முகில் தென்றலினை
மறவுங்கள் மீதமாக இருக்கும்
இன்னல் உழைப்பு ஏழ்மை உயர்வு
என்பவற்றைப் பாடுங்கள்"

என்று இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் மகாகவி து. உருத்திரமூர்த்தி கவிதைப் பிரகடனம் செய்திருந்தார்.

அந்தக் கவிஞனின் வழிகாட்டலைப் பின்பற்றி 'வைகறை வரிகள்' விதைத் தொகுப்பினைக் கன்னிக் கவி நூலாக செவ்வி விக்டர் மான் டிவனியா கவிதைகள் உயிர்த்துடிப்புள்ளவை. தன்னுணர்வு சார்ந்த பாடல்கள் சமுதாயத்திற்கு வழிகாட்டும் கவிதைகள்.

உள்ளத்துணர்வே கவிதை என்ற வகையில் இக் கவிதைகளில் பல நூலாசிரியரைப் பாதித்த விடயங்களாகவும் நூலாசிரியர்கள் மானிட சமூகத்திடம் அவாவுகின்ற விடயங்களுமாகவே அமைந்திருக்கின்ற விடயங்களுமாகவே அமைந்திருக்கிறது என்றால் மிகையில்லை.

"அவன் மட்டும்" என்ற கவிதை சகோதர இழப்பால் துடிக்கும் துயரம் துலக்கும் கவியல்லவா? நினைவுகள் கோடி என்னுடன் அவன் மட்டும் போதும் என் நெஞ்சுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வரிகள் ஆசிரியரின் உச்சமான வேதனை வரிகள். "முக்கியத்துவம்" என்ற கவிதை காதல், இலட்சியம் இரண்டில் எது முக்கியம் என்ற வினாவிற்கு விடை கூறுகின்றது. நூலாசிரியரின் இலட்சிய வேட்கை கவிதைகளுக்கிடையில் ஊடுருவியுள்ளதைக் காண முடிகின்றது.

"ஒன்றே" "பந்து" என்ற கவிகள் நடைமுறை வாழ்வில் அனுபவித்து உணர்ந்ததை தமிழாக்கிக் கவியாக்கினாளோ? என எண்ணத் தோன்றுகின்றது.

பந்து தெரியாதோர் இல்லை
பந்துக்கள் இல்லாமல் யாருமில்லை
நாம் வாழ்கிறோம் பூமி பந்து
இறைவன் ஆழ்கிறார்
அவர்க்கு நாம் பந்து

என்று அற்புதமாக வடிக்கும் கவிஞர் உன் வெற்றி தந்து போகும் கழுத்தில் பந்து மாலை"

என தமிழும் தமிழின் சுவையும் கலந்து வடித்த கவி வரிகளாகின்றன.

"நாம் ஏற்ற பாத்திரம் காத்திரமானது" என்று சொல் ஒன்று செயல் ஒன்று என்ற கவிதையில் கூறும் கவிதைவரி "வைகறை வரிகளின்" ஒவ்வொருகவியிலும் ஏதோ ஒரு வகையில் ஒரு "ராஜமுடி" ஆகின்றது.

கவிதைக்கு மெய் அழகு என்ற நோக்கிலான கவிதைகளாவும் சமூக நலன் நோக்கிய நெறிப்படுத்தல் கவிதைகளாகவும் சாதனை படைக்க வழிகாட்டும் கவிதைகளாவும் உள்ளம் உய்த்துணர்ந்த கவிதைகளாவும் வெளிப்படுவதனைக் காண முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாட்டு" கவிதையின் இறுதிவரிநாளைய சந்ததியின் கைநாட்டை நிப்பாட்டு என முடிவதனூடாக நூலாசிரியரின் சமூக அவா வெளிப்படுத்தப்படுவதைக் காண முடிகின்றது.

"வரம்" என்ற கவியினூடாக இடி இடித்தும் வாழத்துணிந்த எம் வாழ்வே வரம்" எனக் கூறும் நூலாசிரியர் மிகச் சாதுரியமாகப் பூடகமாகப் பேசும் வரிகள் அற்புதமானவை கதறிய போதும் சிதறிய போதும் அவதிகளை அர்த்தமாய் ஏற்றோம் என்றும் எழுதியவை உள்ளத்தைத் தொட்டுச் செல்கின்றது. இதேவகையில் 'தேற்றம்" கவி'

கணிதம் சொன்ன
வெல்லும் வாழ்வை
இனிதாய் இசைக்க
வாழ்வை அறிய
நீ நேர்கோட்டில் பயணம் செய்

என வாழிகாட்டுகின்றது. காதல் இல்லாத கவிதைத் தொகுப்புக்கள் மிக அரிது. வாழ்வோடு ஒட்டியது காதல். நெருப்பும் சுடுவது போல மனிதனிடமிருந்து பிரிக்க முடியாதது காதல். அந்த வகையிலே ஆசையில் ஓர் கடிதம், கிட்டாதாயின் வெட்டன மற, வசப்பட மாட்டாயா சொன்னால் தான் காதலா போன்ற கவிதைகள் தரும் கவி வரிகள் ஆழமானவை.

நீ வருவாய் நான் அறிவேன்
நீ மறந்தால் நான் மடியேன்
ஏனெனில் எனக்கான கடமை நிஜமாக இருக்கிறது என்றும் இளையவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

வைகறை வரிகள் என்ற அழகிய அருமையான கவிதைத் தொகுப்பு பொங்கும் உயிரினை உலுப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகறை வரிகள் என்ற அழகிய அருமையான கவிதைத் தொகுப்பு பொங்கும் உயிரினை உலுப்பும் உன்னதவரிகள் நூலாசிரியரின் இலக்கிய ஆளுமைக்குச் சான்றாகின்றது.

மகாகவி து. உருத்திரமூர்த்தி அவர்கள் தன் கவிகள் "கேடுற்றவரிடையே கெட்டழியா தென்னிடமே எஞ்சிக்கிடக்கின்ற இன் தமிழ் இவ் வெண்பாக்கள் என்றைக்கொரு நாளோ எத்திசையும் வெல்லும்" என்று உறுதிபடக் கூறியது போல டிவனியாவின் வைகறை வரிகளின் விடியல்கள் எத்திசையும் வெல்லும் திறன் வாய்ந்தவை இந்த நூலாசிரியரின் நூலாக்க இலக்கிய முயற்சி தொடரவும், அவரின் சாதனைகள் தொடரவும் இறையருள் வேண்டி நிறைவு செய்கின்றேன்.

நன்றி.

திருமதி சண்முகராசா மணிமேகலை B.A (Hons)
உள்ளூராட்சி உதவியாளர்
பிரா. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
கிளிநொச்சி.
15/09/2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



கிளிநொச்சி மாவட்டத்தின் பிரபல விளையாட்டு வீராங்கனையான பரந்தன் கிளிநொச்சியைச் சேர்ந்த செல்வி டிவனியா நிலுசினி அவர்கள் "வைகறை வரிகள்... கவிதைத் தொகுப்பு.." என்ற பெயரில் ஒரு கவிதை நூலை வடித்து வெளியிட இருப்பதைத் கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன். விளையாட்டுத்துறையில் மட்டுமன்றி இவர் கவிதை வடிப்பதிலும் தன் திறமையை வெளிக்காட்டியிருப்பது கண்டு அவரை மகிழ்சியுடன் பாராட்டுகின்றேன் நெருக்கடியான யுத்த காலகட்டத்தில் போதிய உதவியின்றி தனது விளையாட்டுப் பயிற்சிகளை தந்தையாருடனும், தாயாருடனும் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் தரித்து நின்று பயிற்சிகள் பெற்றுள்ளதை நேரில் கண்டுள்ளேன். இவரது வெற்றிக்குப் பின்னால் இவரது பெற்றோர்களும் இருந்துள்ளார்கள். தொடர்ச்சியான தளர்வில்லாத முயற்சியின் காரணமாக முன்னேறிய இவர் கலைத்துறையிலும் முன்னேறி தடம் பதிக்க எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

தி. இராசநாயகம்
வட மாகாண பொது நிர்வாகச் செயலக பிரதிப் பிரதம செயலாளரும்
கௌரவ ஆளுநரின் கிளிநொச்சி. யாழ்ப்பாண மாவட்டங்களின் பிராந்திய ஆணையாளரும் முன்நாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்துரை

நிகழ்கால நிகழ்வுகளை வெறும் சொல்வரியாக மட்டுமல்லாமல் வாசகர்களுக்கு ஒரு புதிய அனுபவமும் புத்துணர்வும் தூண்டக்கூடியதாக அமைவதுதான் படைப்பாற்றல் கலையாகும்.

படைப்பாற்றல்கலை எல்லோருக்கும் வசப்படுவதில்லை. சொல்லுவார்கள் "அறிவு பிறப்பிக்கப்படுவதில்லை. பிறப்பாக்கம் கொள்வது" என்று இத்தகைய ஆற்றலின் தன்மையிலேயே ஒரு படைப்பின் வெற்றி தங்கியுள்ளது. அது வாசகர்களின் மனங்களை தொட்டு உணர்வலைகளாக வெளிப்பட்டு சமுதாய மாற்றத்திற்கான பிடிமானங்களை உண்டாக்கிவிடுகின்றன. அவை வாழும் தலைமுறையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்வரும் தலைமுறைக்காகப் பாதுகாத்து கைமாற்றம் செய்யப்படுகின்றன. இது சிலபிரதேசங்களில் மண்வாசனை கொண்டு வரன்முறைத் தோற்ற எச்சங்களாக வெளிப்படுவது கண்கூடாகிறது. இது விழிதிறக்கும் டிவனியின் ஆழமாகும்.

பரந்தனூர் படைப்பாற்றல் வாசனை கொண்டது. ஈழத்துச் தமிழ்ச் சிறுகதை முதன்நிலையாளர்களில் ஒருவராக திகழும் தாமரைச்செல்வி கவியினால் உயர்ந்திலங்கும் பரந்தனூரான் எனும் தயாளன் அவ்வவர் வரிசையில் இன்று ஒரு டிவனியா நிலூசினி மான்ன் முனைப்புக்கொண்டுள்ளது மண்ணின் பெருமைக்கு சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சாகத்துணிந்தவனுக்கு சமுத்திரம் முழந்தாழ் மட்டு" என்றது போல் முயற்சி கொண்டவனுக்கு சாதிப்பு பெரியதல்ல என்பது இவ்வெழுத்து வரிகளுக்குரித்தான டிவனியா நிலுசினியின் எண்ணமாகும். சிறுவயதிலிருந்தே எதையும் செய்துபார்த்து அதில் திருப்தியும் வெற்றியும் மகிழ்ச்சியும் காணும் டிவனியாவின் துறையாற்றல்களில் இவ்வெழுத்து வரிகள் புதியதொரு பரிமாணமாகும் ஒவ்வொருவரது வெற்றிக்குப் பின்னும் ஒருவர் இருப்பதுபோல் இவரது வெற்றிகளுக்கு பின்னனியில் இருவருளர் கல்வியில் கண்ணாக இரவுபகல் பின்னின்ற தாய் சாந்திமான்ன் மண்ணில் கால்பதித்து படைத்த சாதனைகளின் பின்னயில் தந்தை விக்டர் மான்ன் இவர்கள் இன்றும் என்றும் டிவனியாவின் எண்ணங்களுக்கு உயிர்கொடுத்தவர்களாவர் "ஈன்றபொழுதில் பெரிது வந்து சான்றோர் ஆக்கிய பெருமை என்றும் இவர்களதே"

வைகறை வரிகள் டிவனியாவின் கற்பனைக்கப்பால் உள்ளூர உறைந்தெழுந்த அற்புத வரிகள் சிறிது பெரிதாக யாவற்றையும் தொட்டவரிகள் ஆழமரத்தில் பெருவிழுதின் பின்னிருக்கும் சிறுவிழுதாக இவ்வரிகள் இருப்பினும் ஒவ்வொன்றும் வாசகர் மனங்களில் விழுதெறிந்து வேர்விடும் என்பதில் ஐயமில்லை. நான்படித்த வைரமுத்துவின் "வைர வரிகள்" மீண்டும் ஒருமுறை நினைவில் டிவனியாவின் வைகறை வரிகள் வழிசமைத்துள்ளது. வைரவரிகளாக வைகறை வரிகள் வாழ வாழ்துகின்றேன். டிவனியாவின் வேதனைநிறைந்த சாதனைக்குள் இக்கவிதைத் தொகுப்பு வெற்றிபெற்றுத் தொடர்ந்து படைப்பாக்கம் பெற இறைநல்லாசிகளை வேண்டி விடைபெறுகின்றேன்.

அக்கராயன் மகாவித்தியாலய அதிபர்.
க. கண்ணபிரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



எமது பிரதேசத்தினைச் சேர்ந்த செல்வி விக்ரர் டிவனியா நிலூசின் மான்ன் அவர்கள் பல்துறையிலும் பிரகாசித்து வருபவர். இவர் சிறந்த விளையாட்டு வீராங்கனை மட்டுமன்றி எழுத்தாக்கப் புலமையும் உடையவர் என்பதை இக்கவிதைத் தொகுப்பு வெளியீட்டினூடாகவும் நிரூபித்துள்ளார். காலம் காலமாக கவிஞர்கள் கையாண்டு வரும் மரபுக்கவிதை வரம்பினை தாண்டி இன்றைய உலகில் பல இளம் கவிதைப் படைப்பாளிகள் புதுக்கவிதைகளை ஆக்கி வருகின்றார்கள். இந்த வகையில் இவ்வெளியீட்டினூடாக எமது பிரதேசத்திலிருந்தும் புதுக்கவிதை ஆக்கப் படைப்பாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார். இவரின் "வைகறை வரிகள்" கவிதைத் தொகுப்பு வையகமெல்லாம் நிலைத்திட மனதார வாழ்த்துகின்றேன்.

சி. சத்தியசீலன்,
உதவி அரசாங்க அதிபர்,
கண்டாவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரீங்கார நாயகனின் பெருமிதம்!



என் இனியவர்களே!
கவிதையை நேசித்து யாசிக்கும் உறவுகளே
இனம் மதம் மொழி கடந்து
கவிதை எனும் ஒரு மொழியால் ஒன்றாகிய
உறவுகளே!

காயங்களின் நதிமூலங்களை ஷிசி மூலஙங்களை தேடாமல்
எங்களிடம் எஞ்சியுள்ள மூலகங்களை கொண்டு
எம் எதிர்கால சந்ததிக்காய்
உரமாக்கும் உணர்வுகள் தான்
இந்த விடியலின் விளை நிலம்
"வைகறை வரிகள்"

உங்கள் இதய வாசல் திறந்து
உணர்வுகளால் உள்ளார உணர்ந்து
உங்கள் இருள் சூழ்ந்த உணர்வுகளை
இவளின் வைகறை வரிகள் கொண்டு
ஒளியூட்டுங்கள்.
ஒலி வரும் திசையெல்லாம்
ஒற்றுமையாய் எம்
நாளைய சந்தத்திக்காய்
"இனி ஒரு புது விதி செய்வோம்"
அன்புடன்
"ஊடகச் செம்மல்"
ரீங்கார நாயகன் T.S முகுந்தன்
சூரியன் FM சிரேஸ்ர அறிவிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் இதயம் பேசுகிறது...



உங்களுக்காக உங்களுடன் நான்!

கடந்த காலங்களில் என்னை விளையாட்டு வீரங்கனையாவும், வர்த்தகத் துறை மாணவியாகவும் அறிந்த உங்களுடன் இப்போது எம் தமிழ் கவி மூலம் பேச வருகிறேன்...

இதுவரை உங்கள் கண்களில் தெரிந்த என் சாதனையை முதல்முறை உங்களில் கைகளில் சமா்ப்பிக்கின்றேன்.. ஏனெனில் வைகறை வரிகள் உங்களை தாங்கும் என்ற நம்பிக்கை... அதனால் என்னை தாங்கள் ஏந்துவீர்கள் என்ற எண்ணம் எனக்கு..

உங்கள் வழிகாட்டல்கள் கைதட்டல்கள் என்னை சபை ஏற்றின என் சொல் வெட்டுக்கள் சில்வண்டாக உங்களை தட்டிக்கொடுக்க வருகின்றன. இன் நேரம் புதிய பாதை சரியாக சரியாமல் தந்தது சூரியன் வானொலியன் காலை நேர ரீங்கார நிகழ்வு.

உங்கள் செவிகளை வந்து செய்தி சொன்ன ரீங்கார கவிதைகளை காற்றலையில் தூசாக போய்விடாமல் சான்றாக மாற்ற ஏற்ற வழிகாட்டல்களில் என் முதல்க்கவி ஏட்டினையும் கானங்கள் சேர்ந்துவரும் பேசும் கவிகளையும் நீங்கள் உணர என் மூச்சின் உருவமாக விதைத்துள்ளேன்.

என்னை சாதனை நாயகியாக போற்றிய என் நாடு வாழ அதை ஏற்ற எம் மக்கள் வாழ என் கவி எம் கரம் கோர்க்கும்.. பலர் எழுதி தழுவிய பேனாவை என் கையில் எடுத்தேன். கவி தொடுக்கிறேன்.. எம் நாளைய சந்ததிகள் எமைத் தொடர எனக்கான சுவட்டொழுக்கு மாறாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிப்பேன்... என்றும் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்...

என் பாதங்கள் மேடு, பள்ளம், வெள்ளம், சகதி, கற்கள், முட்கள் ஏந்த பயணிக்கின்றன. கவிகளோ! அதை தாங்கும் துணிவை உரைக்கின்றன... எனை செதுக்கிய பாடசாலைகளில் (கிளி/புனித பற்றிமா றோ.க.வி)2002 கிளிநொச்சி ம.வி (2005) என் தடையங்கள் எனக்கு கிடைத்த வரம். என் "பெற்றோர்" மற்றோர் போன்று எனை ஏற்ற அவர்கள் ஆற்றும் பணி யாருக்கும் கிடைக்காத வரம்.

சாதனைகளை சான்றாக தோன்ற வைத்த என் தந்தை இன்று வாழ்நாள் சாதனையாளராக எனக்கு தெரிகிறார்..

என் தமிழ் பொங்க என்னை ஆக்கிய என் அசான் திரு. கண்ணபிரான் அவர்கள் என் ஸ்வரம் என்பேன்.. இன்று கவி எனக்கும் எழுதத் தெரியும் என்று எனை வடித்த சூரியன் ரீங்காரம் என் தமிழ் ஆகாரமாக ஆதாரம் தருகிறது.. என்பேன்.

பல கவிஞர்களை வளர்த்த ரீங்காரம், என் சாதனையை ஆக்கிய பெற்றோர், என்னை மட்டும் உருவாக்க இருக்கிறார்கள் என்பது அல்ல, உனக்காகவும் இருக்கிறார்கள் என்பதை உணர வைப்பதே இந்த வைகறை வரிகள்...

உன்னாலும் முடியும்
உனக்கும் தெரியும்
நீயும் வா...
நாம் சேர்ந்து முடிசூடுவோம்
என்றும் அன்புடன்
உங்கள் டிவனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன் - FM

ரீங்காரம் எம் கரம் பிடித்து
உயர் வழி நடத்தி
உரிமைக் குரல் கொடுத்து
வளர் கவி பாட வளர்த்தமைக்கு
நன்றி கூறி
சமர்ப்பிக்கின்றேன் என் கவியை...

இவன் தான் முதல்வன்
பிரபஞ்சம் தொட்டு
மொட்டு மலர்வது முதல்
உயிர்கள் உயிர்ப்பது வரை
தன் தீண்டலால் தூண்டும்
சூரியன் நாமத்தை
தான் வாகை சூடி
இசைக் கீற்றுக்களால் தீண்டி
எம்மை ஆண்டி ஆக்கினான் அன்பினால்
எம் வானொலி முதல்வன்சூரியன்
தூண்டில் போட்டு
ஒவ்வொரு உயிர்களையும்
கண்டங்கள் தாண்டியும்
தன் வசப்படுத்தினான்
முதல்வன் சூரியன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாய சூரியன்
சரிபாதி வஞ்சம் செய்ய
எம் முதல்வனோ இதயங்களுக்கு
தஞ்சம் தந்து தரணியை
அரவணைக்கும் இசையின்
அசைவாகினான்
முதல்வனாய்...

எத்தனை ஆதவன் தோன்றினாலும்
அத்தனை ஆயிரம் பலம் சேர்த்து
முதல்வனாகவே மிளிர்கிறான்
எம் முதல்வன் சூரியன்..

தென்றலில் தவழ்பவன்
வசந்தம் தந்தவன்
சக்தியையும் தருபவன்
வெற்றி கொண்டவன்
இவன் தான் முதல்வன்...

வானலையில் வானொலியில்
செவி வழி சென்று
இதயவாசல் திறப்பான்...
இவனை வெல்பவன்
தவணை சொல்பவன்
யாரும் இல்லை.
எங்கள் சூரியன்
என்றும் முதல்வன்...

" தமிழின் ராஜாங்கம்
சூரியனின் ரீகாரம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவுக்காக!

அன்பின் ஆகாயம்
ஆதரவின் அர்த்தம்
இதயங்களின் இருப்பிடம்
ஈசனின் மறு உருவம்
உள்ளங்களின் உண்மை
ஊடலின் வெண்மை
எனக்கான ஏணி
ஏழைகளின் தோழன்
ஐங்கரனின் அற்புதம்
ஒருமையின் பன்மை
ஓராயிரம் உறவுகள்
ஔடத வேதம்
என் தந்தையின் சங்கமம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா

❖ இவ் எழுத்தே
என் அம்மா...
கவிதையான அன்னைக்கு
கவி எழுத என்னால் முடியவில்லை
நீங்களும் இப்படித்தானே?
உனக்கு
"கற்பனையோடு வாழும்
காலம் வசந்தமாகவும்
நிஜத்தோடு வாழும்
ஒரு வினாடி
உன் வரலாறாக
மாறலாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைகறை வரிகள்.............**

# எழுதுகோல்களால் தொடங்கியது யாகம்....

எழு எழுத.. தொழு மகிழ..
அழ விளைய உன் இதழ் மலர..
உன் உள ஆழத்தை அள என ஒரு தூது..
விழ நினைத்த நீ விழிக்க..
பல கவிகள் உனை அழைக்க..
விடிகாலை உன் விழிகளில்
விளக்கானது ரீங்காரம்...

எழுத்தாணியாள் சளைக்காத தமிழ் எழுதி..
அதை நிறுவி..
சில நேர வானவில் அல்ல நாம்
என்று கருதி..
வான் தழுவும் எம் பேச்சின்
மூச்சுக் காற்று
என்பது உறுதி..
இதை தழுவி
யாகம் தொடங்கினோம்
எம் தாகம் தீர்ப்பதற்காய்

தொடங்கிய பந்தகங்கள்
முடக்கியது எம்மை..
அடங்கிய நாங்கள்
வடங்களை இழுப்பது போல்
இடங்களை காப்பதற்காய்
விடயங்களை தடயங்களாக்கி..
அவயவங்களில் பயங்களை விலக்கி
அனைவரும் விழித்தெழ யாகம் தொடங்கினோம்..

கோவலங்களுக்கு கோவலன்கள் தரும்
சாளரங்கலுக்கு ஆலாபனை தவிர்த்து
சாதகங்கள் உரைக்கும்
சாதாரண சாமாகனங்கள் கேட்க
யாகம் தொடங்கினோம்..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால்கள் ஏவலாகையில்
அவாவில் வாய் திறக்க
சபையில் நா அடக்க..
யாரும் இங்கு இல்லை..
விழாவில் கலை வடிக்க
கனாவில் கவி தொடுக்க
இங்கே சொற்போரும் தொடங்கினோம்...

தட்டிக் கேட்டவுடன்
தடக்கி விழுந்துவிட
சட்டி பானை முட்டி
அல்ல நாம்...
சுட்டிக் காட்டி
சுடக்கெடுக்கத் துணிந்த
துடுப்புக்களின்
வடுக்கள் நாம்

கற்க மறந்தவர்
அறிவு திறக்க...
கற்பிக்க மறந்தவர்
மனம் படைக்க...
வெற்று என நினைப்பவர் வாழ்வில்
உற்றவர் பிறக்க..
பற்றுத் துறந்தவர்
உற்று நோக்க..
புற்று நோய் கூட
அற்றுப் போக..
எழுதுகோல்களால் யாகம் தொடங்கினோம்...

வான வெளி
கண் வழி வந்து...
செங்கோல் எம்
கோலாக இங்கு..
எழுத்துக்களை கிறுக்கி விட்டு
மாழ்வதற்காக அல்ல..
பொறித்து வைத்து
ஆழ்வதற்காக..
எழுதுகோல்களால் யாகம் தொடங்கினோம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்து..



பந்து தெரியாதோர் இல்லை
பந்துக்கள் இல்லாமல் யாரும் இல்லை..
நாம் வாழ்கின்றோம்
பூமி பந்து..
இறைவன் ஆழ்கிறார்
அவர்க்கும் நாம் பந்து..

பந்து இல்லா
பந்தயம் அரிது..
அடி பந்து பிடி பந்து
எறி பந்து உதை பந்து
மென் பந்து வன் பந்து
என செயல் இயல்பில்
பல வகைப் பந்து..
உன் வகைப் பந்து..
உன் செயல் இயல்பில்
நீயும் பந்து என்று
என் சிந்து இன்று..

அடிபடுகிறாய் பிடிபடுகிறாய்
எறிபடுகிறாய் உதைபடுகிறாய்..
பயன்படுகிறாயா?
மென் பந்தா வன் பந்தா?
உன் உதடுகள் சிரிக்க
உரிமைகள் பிறக்க
இன்று வேண்டும் சாதனை..
உனக்கான பந்தயம்
எது என்று சபதம் எடு..
உன் வெற்றி தந்து போகும்
கழுத்தில் பந்து மாலை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் மட்டும்



அன்பைத் தந்தவன்..
இதய ஓவியமாக
என்னை மட்டும்
காண்பவன்
அவன் என்
முதல்வன்..

அவன்
விடைபெற்ற அந்த நாள்..
நான் அறியவில்லை
கடைசி விடை பெறல் என்று..

போய் வருகிறேன் என்றான்
சொன்னது போல வந்தான்
உயிரற்ற உடலாய்

உறுதியானவன்
இறுதியாக விடைபெற்றான்..
என்
உரிமையானவன்
உரிமை தேடி தன்
உயிரை பதி வைத்தான்
மண்ணின் மைந்தனாய்...

எல்லாமே எனக்காக என்றவன்
சொல்லாமல் சென்றான்
அன்னை அன்பை
தமிழில் வைத்தான்
என் அன்பு அண்ணன்..

அவனைப்போல் உறவு எனக்கு யாரும் இல்லை..
அவனைவிட இழப்பு எனக்கு ஏதும் இல்லை..
நினைவுகள் கோடி என்னுடன்
அவன் மட்டும் போதும்
என் நெஞ்சுடன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையில் ஒரு கடிதம்..

முதலும் இதுவே முடிவும் இதுவே!
உனக்காக நான் எழுதும் கடிதம்..
நலமா என்று வினவ மாட்டேன்
நான் இல்லா நீ
நலமாக இருப்பது எப்படி?
காதலில் தொலைந்த நாம்
தொலைவானோம் தொடரமுடியாதவர்களாய்..
உன் நினைவுகளுடன்
நா'ன் பிணைந்து வாழ்கிறேன்.
ஒரு கணம் அணையாத தீபமாக..
உனக்காக நாம் சேமிக்கும் சில்மிசங்கள்
மொத்தமாக உனக்கு என் முத்தமாக கிடைக்கும்..
வெட்கமாக இருக்கிறது ஆனாலும்
சொர்க்கம் அன்பில் பிறக்கிறதே!!
நான் இல்லாத உன் வாழ்வு
காற்றில்லாத அகிலம் போல..
நீ இல்லாத என் வாழ்வு
சூரியன் இல்லாத அண்டம் போல..
என் இலட்சியங்கள்
முதல்முறை உனை அழைக்க
கேட்கின்றன..
விலகி இருக்க விருப்பம் இல்லை..
உன்னை கூடவே அழைக்க
உரிமையும் இல்லை..
நீ வருவாய் நான் அறியேன்
நீ மறந்தால் நான் மடியேன்..
ஏனெனில் எனக்கான கடமை
நிஜமாக இருக்கிறது.
உன் மௌனம்
பல கேள்விகளை தருகிறது..
என் சலனம் உனக்கு
மடலாக வருகிறது..
நீ இருந்தால் வாழ்க்கை
ரொம்ப நன்றாக இருக்கும் தான்
நீ இல்லை என்றாலும் வாழ்க்கை
நிச்சயமாக நடக்கும்
என் சாதனைக்காக...
அன்புடன்...
உன் வம்பு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனா முனை..

எழுத எழுதுகோள்
எடுத்த எம் சக
உறவுகளே!
தமிழ் வரவுகளே!
உங்களுடன் நான்..
நாட்டின் தலைவிதியை
தீர்மானிக்கும்
சாட்டின் சான்றுகள்
ஏர்முறை
போர்முனை
பேனா முனை..



பச்சை வயல்களை
பேச வைக்கும் விவசாயம்
தமிழ் மக்களை
அச்சமில்லை வாழ்வை வாழ
கஷ்ரம் இல்லை என்று
தலைநிமிர்ந்து
சொல்லவல்ல வளம்
வாழ்கிறது பசுமையாக..
இன்று யுத்த முனைகள்
மிச்சமில்லை எம் சொச்ச
உறவுகளை கச்சை
கட்டியாவது
முத்தமிட்ட முதல்வர்களை
சத்தம் போட்டு

விதைத்தும்
இரத்தம் குழித்து
இரத்தத்தில் மிதந்து வந்து
வாழத் துணிகிறோம்
காலம் பதில் சொல்லும் என்று...

இத்தனைக்கும் எம்மொழி
ஆயுதமாய் பேனாவை
கையில் எடுத்தோம்
கவிகளை தொடுக்கிறோம்
எமக்கான கடமையை
மடமை இன்றி
இறமை காக்க
விதைகளாக கருத்துக்களை
விதைக்க முனைவோம்..
ஏனெனில்! எம் இயலுமையில்
எஞ்சி இருப்பது
பேனா முனைகளே!
கண்ணின் இமை போல
எம் மண்ணின் அணை
பேனா முனை.. என்று நினைத்து
அனைவரும் இணைவோம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையே வெல்லும்

நாடகம் ஆடும்
மனிதன்
நடமாடும்
எம் உலகம்..
இங்கே எப்படி உண்மை வெல்லும்?
இருந்தாலும்
இப்படி
உண்மை
வெல்லும் என்று
செப்படி என்றது
என் அறிவு..
உண்மையாகுமா?
எனும் சந்தேகத்தில்
உண்மையாக அகப்பட்டவர்கள்
வென்றதால் அனுபவிப்பது
உண்மை..
காதல் உண்மை
என நம்பி
தும்பியானவர்கள்
அதிகம் என்பது உண்மை..
உயிர்கள் பறிக்கப்பட்டது
உண்மை
பயிர்கள் பதுங்கியது
உண்மை..
தளிர்கள் வெளுர்கிறது
உண்மை..



இத் தன்மை
உண்மை இல்லை என்று
உரிமை பறிக்கப்பட்டு
நடமாட எல்லை
குறிக்கப்பட்டு
எம் வாழ்வியல்
நகர்கிறது
என்பது உண்மை..
கடமைகள் தவறியதால்
இறமைகள் இழந்தோம்
என்பது உண்மை..

பொய்கள் மட்டுமே
உண்மையாய் இன்று
எம் மத்தியில்
மனித புத்தியில்
வாழ்கிறது.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை!



தேவைகளும் விருப்பங்களும்
மனித வாழ்வின் திருப்பங்கள்..
சேவைகளும் தேவைகளும்
எமக்கான தருவங்கள்..

பருவங்கள் பருகும்
பலவகை விருப்பங்கள்
எம் நிலை குலைய
பகை வளர
பதமாகிறது தேவைகளாய்..

மறுமலர்ச்சி இன்று எம் தேவைகளாய் இருக்க..
சிறு வளர்ச்சி கூட இங்கு இல்லை..
மறு பிறப்பு எடுத்து வந்தும்
மனமாற்றம் நன்மைக்காக இல்லை..
தேவை மாற்றங்கள்..
அன்மைக் கால அபிவிருத்தி தேவை..
அழிந்த வாழ்வின் படிப்பினைத் தேவை..
அஞ்சாத ஆற்றல் தேவை.. எமை
மிஞ்சிய பொறுமை தேவை...
வறுமையிலும் விலகாத அன்பு தேவை..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல் ஒன்று செயல் ஒன்று..

இன்று இந்த வேதம் புதிது..
வள்ளுவர் சொல்வாதவை மிச்சமுண்டோ?
பாரதியார் சொல்லில் அச்சமுண்டோ?
முக்காலம் உணர்ந்தும் கீதைக்கு தலைசாய்த்து
சொல் ஒன்று செயல் ஒன்று
இது இங்கு நிஜம் என்ற
சொல்லும் செயலும் ஒன்றாக இவள் கவி..

ஆசைக்கு நீ அறிவுக்கு நான் என்று
பதில் உரைத்த தமிழ் நிஜம் (என்றல்)
வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பது நிஜம் என்றால்
சொல் ஒன்று செயல் ஒன்று சரி என்று ஒரு வாதம்..

இதுவே நடைமுறை
இதுவே நாடகம்
இதுவே நாகரீகம்
இதுவே நடந்தது நடக்கிறது நடக்கும்..
எனவே இதுவே சரியானது..



சொல்லும் செயலும் ஒன்றாக மலர
ஆசைதான்.. தேவைதான்..
ஆனால் சாத்தியமாகுமா
இந்த சத்தியம்.. இல்லையே!
இல்லாத ஒன்றை இருக்கவேண்டி கேட்க
நான் தயாராக இல்லை..
தவறாக இருக்கும் சிதறாத சிந்தனையை
சரியாக மாற்ற இந்த அரங்கேற்றம்..

உண்மை அன்று மயானம் காத்தது
சொன்னதை செய்தவர் பிறர் சொன்னதையும் செய்தவர்
மயானம் மைதானம் ஆனது இன்று..
இதனால் என்ன ஆனது?
கல் அடிபட்டு கண்ணாடி உடைந்தாலும்
சாத்திரங்கள் சாதகங்கள் உரைத்தாலும்
ஆத்திரத்தில் பாத்திரங்கள் உடைத்தாலும்
நாம் ஏற்ற பாத்திரம் காத்திரமானது..
சரியான குறி என்று நினைத்து
இன்னிலை காத்திட
சொல் ஒன்று செயல் ஒன்று
இனியும் எம் தமிழுக்கு பாதுகாப்பானது..
சொல்லும் செயலும் ஒன்று என்று
ஆழ்பவன் இறைவன்..
மனிதன் அதை செய்தால் புனிதன்
யார் அவன் தேடுகிறேன் நானும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலை வீசு

*விலை வலை வீசி*
*சிலைகளானோம்*
*தலை உருள உருள...*
*குபேரனும் இங்கு வந்தான்*
*குசேலர் நிலைதான்..*

*விலையின் விளைவால்*
*சிலைகளான எம்மை*
*நல்ல கலை அம்சம் என்று*
*மெல்ல தள்ளி..*
*இதுதான் தருணம் என்று*
*குத்துக்கரணம் அடித்து*
*அட்டாங்க நமஷ்காரம் போட்டு*
*கப்பம் கட்ட*
*உத்தரவு தருபவர்க்கு..*
*உத்தரவாதம் கொடுக்கும்*
*போலிகள் எமக்கு வேலியானதால்!*
*வாளி கூட எமைப்பார்த்து*
*கேலியாய் சிரிக்கிறது..*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை அலை மோதும் வாழ்வில்
அலைமேல் வலை வீசும்
உயிராயுதங்கள் மீனவர் கதை பேச
உயிரான கவி தரவந்தேன்..

தென்றல் முத்தமிட
கடல் அலை சத்தமிட
இரவு மகள் மடை திறக்க
போயிடுவர் வளம் கொழிக்க..
கரைதன்னில் மீண்டிடுவர்
மாண்டிடா நம்பிக்கையுடன்..

உயிர் வாழ வளம் தேடி
சமுத்திரம் தொடும்
உறங்காத விழிகள்
படும் பாடு
பாடும் போது
தேடும் நாடு..

அலையை கலையால் மயக்கி
உயிரை உயிரால் உரசி
விலையின் வகைகள் அழைத்து
வலையில் வாழ்வியல் காணும்
மீனவ மக்கள்
எதிர்நீச்சல் தரும்
எமக்கு துணிச்சல்...

கரையோரம் கொஞ்ச நேரம்
என் பார்வை பட்ட போது
நெஞ்சை தொட்டது
இவர்கள் வாழ்வு...
வெய்யிலில் கருவாடாகி
மழையில் கண்ணீர் மறைந்து
உப்பில் உறைந்து
சிரித்து வாழும் மனிதம்
உனக்கும் தருகிறது தைரியம்..
இவர் வாழ்வு கண்டு
நீயும் துணிந்து நின்று
உலகிற்கே வலை வீசு
விட்டுப்போன தலைகள் கூட
சிக்கலின்றி சிறைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியானவர்கள்...

வளி வழி வந்து
செவி வழி நுழைந்து
அறிவொளி தருகிறது
ரீங்காரம்...

பட்டு ஆடை
வேட்டி சால்வை
தமிழ்ப் பண்பாடு என்பர்..
மாற்ற ஆடை இல்லாத போதும்
நவ நாகரீக மாற்றம்
வேண்டும் என்பர்..

குற்றங்கள் சாட்டுகையில்
சுற்றங்கள் தப்பு என்பர்..
பட்டங்கள் பெற்ற போதும்
சட்டங்கள் காக்க மாட்டார்..

போத்துக்கீகசர் வந்தபோதும்
போர்த்துக் கொண்டு தூங்கினர்
தம் போக்குகளுக்கு போய் வந்து
சாக்கடைக்குள் சிக்கினர்..
மானம் காக்க கானம் கேட்கையில்
சரணம் எடுத்து விரட்டினர்..
மாண்ட மைந்தன் மயானம் தேடி
சுயம் இழந்து நிக்கின்றனர்..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலால் உலகம் காதல் செய் காதல் சரி
காதல் வாழ்க என்று காதல் செய்வர்..
ஆனால் பெண்ணுரிமை கேட்டு நின்று
கண்கெட்டு கணக்காய்வர்..
புதுமை வேண்டும் சாதனை வேண்டும் என்று
சாணக்கியமாய் செப்பனிடுவர்..
தடைகள் தாண்டி மடைகள் திறக்கையில்
பண்பாட்டைக் கெடுக்கும்
பைத்தியக்காரத்தனம் என்பர்..

மறந்து வாழ மனம் திறந்து வாழ
சிறந்து வாழ அழைத்தனர்..
பறந்து வந்த பறவைகளை
கூடு கட்டி அடைத்தனர்..
இப்படியானவர்கள் சிக்கலானவர்கள்
இவர் சிக்கலில் சிக்கிடாமல்
செம்பொடு மட்டும்
நீக்காமல் நிகழ்கிறது..

ஏனெனில்
நல்லவர்கள் தொல்லைகளில் சிக்கி
பல்லக்கில் ஏறினாலும்
மல்லாக்காய் வீழ்வதில்லை
செல்லாக் காசாக செயல் இழப்பதும்
இல்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொன்னால்தான் காதலா?

காதல் காதல் காதல்!
அகிலம் ஆழ்கிறது காதல்
அண்டம் அடக்கியது காதல்
இன்றும் இனிமை சொல்கிறார்கள் காதல்..

கவிதை வந்தால் காதல்
கண்ணில்லை சொன்னது காதல்
கவிஞர்கள் யாவரும் எழுதிய காதல்
கரு உயிர் சான்று இல்லை என்றால்
கல்லறை என்றது காதல்...

இவை எல்லாம் காதல் என்றால்?
காதல் இல்லா உயிர் இல்லை என்றா?
காதலை பற்றி ஏன்
ஒவ்வொரு கணமும் பேசுகிறார்கள்?
மறுபடி மறுபடி பேசுகிறார்கள்?
காதலை மனிதம் மறந்துவிடும்
என்ற பயமா?
காதலும் மாயம்
என்பது நிஜமா?
இதனால் தானா?
காதலை பற்றி
காதலில்
விழுந்து விழுந்து
சொல்கிறார்கள்?
ம்.. சொன்னால்தான் காதலா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டு...

வண்ணத் தமிழ் பாட்டு
என் கவியின் மெட்டு
தமிழ் தொட்டு
மலரும் மொட்டு..
சிறகு விரிக்கும் சிட்டு
விலகு என்று கவி கேட்டு
உறவு தொட்டு
வருடும் ரீங்காரப் பாட்டு..



ஜனனம் முதல்
மரணம் வரை
எமை தொட்டு முட்டி
கூட வரும் பாட்டு..
இசை வகையில்
பல இசையில்
எமை அசைக்கும் பாட்டு.
இன்று எங்கள் வாழ்வை
பாட்டு என்று போட்டு
எம் பாட்டு
எது என்று பாட்டு..

பளசுகளின் தத்துவப் பாட்டு
இளசுகளின் குத்துப் பாட்டு
யாவரும் கேட்கும் மெல்லிசைப் பாட்டு
வந்து போகும் சில புதிய பாட்டு
அறிமுகம் தரும் இலட்சியப் பாட்டு
எதிரி திருமுகம் அழிக்கும் வீரப் பாட்டு
கலக்கலாக வரும் காதல் பாட்டு
விளக்கம் இல்லாமல் விளக்கும்
கானாப் பாட்டு..
கண் காண காட்சி தரும் நட்புப் பாட்டு
கண் காண முடியா காட்சி தரும்
கவர்ச்சிப் பாட்டு..
அன்பு பிரிவு தரும் கண்ணீர் பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேநகர் விரும்புவர் சோகப் பாட்டு..
நான் சொன்ன வகைப்பாட்டில்
விடுபட்ட பாட்டு கிராமப் பாட்டு
இவை யாவரும் பாடும்
பண்பாட்டு நோக்கு!!

ஆறுதல் பாட்டு
அருள் தரும் பாட்டு
இறைவணக்கப் பாட்டு
எல்லாம் கேட்டு
இன்று வேண்டும் உனக்கு தலாட்டு..

நாட்டு நடப்பு அன்று போட்டு
வாழ்ந்து காட்டு என்றது பாட்டு
சில மாற்று நடிப்பு
இன்று பார்த்து
தமிழ் மாட்டு என்றது பூட்டு..
காட்டு வழி ஆண்டு
பல கூட்டு வீரம் போட்டு
தமிழ் சான்று நாட்டு
என்றது பாட்டு..
ஆண்டு மாண்டு
நேற்று உடல் தாட்டு
வந்த கதை மீண்டு
தடை தாண்டு என்றது காற்று..
அதை முட்டு
புது மொட்டு தொட்டு
வாழ்வை பாட்டு என்று சொல்வதை போற்று..
நீ என்ன பாட்டு என்று ஏற்று தலை ஆட்டு..
இப்பாட்டில் நீ எப்பாட்டு என்று
உன் மனதை ஒரு கணம் நிப்பாட்டு..
வில்லுப்பாட்டாக பிற்பாட்டு
பாடுவதை உணர்ந்து
முக்காடு போர்த்து..
தமிழ் தென்மாங்குப் பாட்டு
நீயாக வேண்டுமென கேட்டு
வாழ்வை இலட்சியப் பாட்டாக மாற்று..
நாளைய சந்ததியின் கைநாட்டை நிப்பாட்டு..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடை..

உணவு உடை உறையுள்
இவை மூன்றின் சிறையுள்
எம் மறைகள்..
வர்ண வர்ண வடிவமைப்பில்
வகை வகையாக வான வேடிக்கை
பூமியிலே!.. நடமாடுகின்றன ஆடைகளாய்.
உணவு இன்றி சில நாள் வாழலாம்
உறையுள் இன்றி தெருவில்
நின்றிடலாம்.
ஆனால் உடை இன்றி ஒரு நொடி
வாழ்ந்தாலும் மறு நொடி இறக்க நேரிடும்.
இது மனிதன் தனக்கு தானே
போட்ட பூட்டு..
ஆடை நீக்கி பால் குடிப்பர்
ஆடை இன்றி யார் நடப்பர்.
இது போல நட்பு வேண்டும்
பெண் கற்பு போல காக்கப் பட
வேண்டும்..
மானம் காக்கும் நட்பு
எனக்கு கிடைக்கவில்லை..
உங்களுக்கு எப்படி???





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முற்றுப் புள்ளி

முடிவுகள் கண்ட நாங்கள்
கற்றுக்கொண்ட பாடங்கள்
பெற்றுத் தந்த மாற்றங்கள்
ஆற்றுகின்றன காயங்களை..
ஏற்றுக் கொண்ட தீர்ப்புகள்
போற்றுகின்ற பேச்சுக்கள்
இரண்டு நிறம் என்றவர்கள்
பல நிறங்கள் புரட்டுகின்றனர்.



இன்நேரம் நான் கவிபாட
நீங்கள் செவிசாய்க்க
நினைவாக நினைவுகளின்
நினைவுகளை மறக்க
மனங்களுக்கு..
முற்றுப்புள்ளி வைக்க கேட்கின்றேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட காயங்கள் முற்றுப் பெறட்டும்
விட்ட பயணங்கள்
தொட்ட தேடல்கள் தொடரட்டும்..
வைகை அணைக்கவில்லை
பொய்கை அழைக்கவில்லை
மெய்கள் உறங்கவில்லை..
சாய்ந்த தோள்கள்
சாதித்த உள்ளங்கள்
தந்து போன செய்திகள்
எல்லாமே நம்பிக்கை..

கவலைகளுக்கு முற்றுப்புள்ளி வை..
அவமானங்களுக்கு முற்றுப்புள்ளி வை..
ஆபாசங்களுக்கு முற்றுப்புள்ளி வை..
ஆவேசங்களுக்கு முற்றுப்புள்ளி வை..
முடிவெடுக்க வேண்டிய வேளை
முடிவெடுக்க மறுத்ததால்
முற்றுப்பெற்றன தேற்றங்கள்..
முகவரி இல்லா தோற்றங்களுக்கு
முற்றுப்புள்ளி வைப்பதால்
மாற்றம் பெறட்டும்
உங்கள் வாழ்வு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் கடல்..

அழுதேன்..
கண்ணீரில் உப்பு சுவை..
அறிந்தேன்..
இதனால் தான்
நிலப்பரப்பினை விட
கடல் பரப்பு
அதிகம் என்று..



## பசி

யாவரும் ஒன்றே என்று உணர
இறைவன் தந்த வரம்



## காற்று

நாம் வாழ ஓயாமல்
வாயுவாக வீசிக்கொண்டிருக்கும்
உலகின் உயிர்

## காதல் வானம்

பார்த்தேன் அருகே
என்று தெரியும்
ஆனால்!
நெருங்க நெருங்க
தூரமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் பொருள் என்ன?

வாழ்வை நாம் என்ன கேட்டா வாங்கினோம்?
எம்மை கேட்காமலேயே
எம்மை ஆட்கொண்டு
வாழ்வை தந்து
பிழைத்து வாழ
அழைத்தவன் இறைவன்...



எனினும்
சித்தகத்திப் பூவும்
சித்தாந்தம் பேச யோசிக்கவில்லை...
பேசுகிறாள் கேளுங்களேன்..!

வாழ்வின் பொருள்
இறைவன் அருள்..

சவால்களின் தேடல்
மாற்றங்களின் மோதல்
இதன் முடிவு
வாழ்வின் பதில்..
நவீன உலகின்
வேகமான வாழ்வியலில்
தாகமானது எம் தேடல்..
வசதியால் பசி தீர்ப்பவர்
வாழ்வின் பொருள் ருசி..
அசதியால் பசி தீர்ப்பவர்
வாழ்வின் பொருள் பசி..

சுதந்திர நாட்டில்
நிரந்தரமாக வாழ்பவர்கள்
வாழ்வின் பொருள் எமக்குத் தேவை இல்லை..
யானை உண்ட விளாம்பழம் போல்
ஆனவர்கள் எம் வாழ்வின் பொருள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்டவர்கள் கணிக்கப்பட்டனர் இப்படி...
தலைவன் வீரம் என்பான்
தலைவி காதல் என்பாள்
இவர்கள் வாழ்வின் பொருள் கௌரவம்..
ஆட்சி ஆழ்பவன் செங்கோல் என்பான்..
மீட்சி உள்ளவன் சட்டம் என்பான்..
வளர்ச்சி கண்டவன் மகிழ்ச்சி என்பான்..
முயற்சி உள்ளவன் வெற்றி என்பான்..
அமைதி தேடுபவன் அகிம்சை என்பான்..
அடிமை உடைப்பவன் தியாகம் என்பான்..
மாற்றம் காண்பவன் புதுமை என்பான்..
ஒற்றுமை நாடுபவன் சமாதானம் என்பான்..

வாழ்வின் துவண்டவன் கண்ணீர் என்பான்..
தவண்டவ்ன அவலம் என்பான்..
மிரண்டவன் பயம் என்பான்..
புரண்டவன் அனுபவம் என்பான்..
வறண்டவன் போராட்டம் என்பான்..
சுறுண்டவன் கானல் என்பான்..
அருண்டவன் ஏமாற்றம் என்பான்...
வெருண்டவன் அவமானம் என்பான்..

உங்களோடு உங்களாக உங்களுக்குள் வாழ்பவள்
பதில் சொல்கிறாள்!
வாழத் துணிந்து
அருண்டு குனிந்து
புரண்டு வறண்டு
தவண்டு துவண்டு போகாது...
வளர்ந்து முயன்று
மீண்டு ஆழ விளைந்து
அடிமை உடைத்து
அமைதி காத்து
தன்னம்பிக்கை கொண்டு
வீரமும் காதலும் இணைந்து
வாழ்பவன் வாழ்வின் பொருள் சாதனை என்று..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம்..

கரம் ஏந்தும் எழுதுகோள்
சிரம் தாழ்த்தி
வரம் கூற
தரம் இது
நிரந்தரம் என்று
முரசு கேட்கும்..

உரம் கேட்குமா காட்டு மரம்..
வரம் கேட்டதே இங்கு நாட்டு மரம்..
வீரம் குறையவில்லை
காரம் அதிகம் இல்லை..
தூரம் தெரியவில்லை

மின்சாரம் இல்லாத போதும்
மின்னிய விளக்கில் படித்து
கண்ணியம் காத்தோம்
அது ஒரு வரம்..
பின்னிய ஓலையில்
கின்னியா வேலியில்
கூடு கட்டி வாழ்ந்தோம்
அது ஒரு வரம்..
பண்ணிய சேட்டைகள்
எண்ணிய ஏக்கங்கள்
பள்ளியில் துள்ளினோம்
அது ஒரு வரம்..



இடறிய போது இடப்பெயர்வு
அழைத்தது..
பதறிய போதும் உறவுகள்
அணைத்தது
கதறியபோதும் சிதறியபோதும்
அவதிகளை அர்த்தமாய்
ஏற்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு வரம்..
குண்டு மழை வந்தபோதும்
நண்டு பிடித்து உண்டோம்
தொண்டை வழி இறங்கும் முன்
மண்டை வழி
குண்டு துளைத்து உயிர்கள்
மாண்டதை கண்டோம்
வண்டு வந்து சொல்லவில்லை
சண்டை என்று தயங்கவில்லை.
சென்று போன உறவெல்லாம்
தந்து போன உந்துதல்கள்
இன்று எம் வரம்..
உணவுக்காக ஏங்கியது வரம்
பசிக் கொடுமை தாங்கியது வரம்
உறவுக்காக பொங்கியது மனம்
தமிழ் வாழ்வுக்காக கேட்கிறது வரம்..


இடம் மாறினோம் அதை தாங்கினோம்
தடை மாட்டினோம் உடை மாற்றினோம்
மீண்டும்
புதிதாய் சிரிக்கிறோம்
இல்லங்கள் ஆக்கினோம்
உள்ளங்களின் பள்ளங்கள் மூடினோம்
இத்தனையும் தேற்றி வாழ்கிறோம்
எம் வாழ்வு வரம்..

ஒரே வாழ்வு ஒரே சூழல்
ஒரே உலகம் என்று சுயநலமாய்
இதமாய் வாழும் வாழ்வை விட
இடி இடித்தும் வாழத்துணிந்த
எம் வாழ்வே வரம்..
சந்தேகமே இல்லை இன்று
நிலவும் இதைத்தான் சொல்கிறது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை..



கவி மாலை தொடுத்து
பூமாலை வகை விடுத்து
பார் மாலை சூட
சிறு கருத்து..

மாலை நேரம்
மாலை போட்டோம்
மாதவர்க்கு..
சில கணம்
மழை கூட நின்று
பார்த்தது அன்று..

நஞ்சு மாலை
சூடுகையில் அஞ்சவில்லை..
பிஞ்சுகள் கழுத்தில்
மாலைகள் விழுந்தது
தவிர்க்க முடியவில்லை..

நெஞ்சு வெடித்தது
சிலர் வீட்டில்
கஞ்சி வடிக்கா நிலையிலும்..
பஞ்சம் அழைத்தது
சிலர் மெய்யில்
மையல் கொண்ட போதிலும்

வம்பு வளர்க்க அல்ல
தெம்பு படுத்த
மாலை தொடுக்க
ஒரு கவி கோர்த்து
போட்டாள்
விடுகதை சீட்டு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ மாலை என்றால்!
சாதனையாளன் கழுத்திலா?
சடலமானவர் கழுத்திலா?
மணமக்கள் கழுத்திலா?
சில வாடகைக் கழுத்திலா? அல்லது
இறைவன் கழுத்திலா?
உன் கழுத்தில் மாலை என்றால்?
நீ சாதனை செய்து வெற்றி
மாலை ஏற்பாயா?
உயிர் விட்டு இறுதி
மாலை கேட்பாயா?
வாழ்வில் வழமையான சார்பில்
திருமண மாலை ஏந்துவாயா?
நீ புனிதனாகி
இறைமாலை காண்பாயா?

நீ மாலை சூடுகிறாய் என்றால்?
யாருக்கு மாலை சூடுவாய்?
வென்றவர்க்கா?
மன்றம் வந்தவர்க்கா?
சான்று இல்லா ஆசாமிகளுக்கா?
பாடை மேடை போறவர்க்கா?

மாலை சூட
இருக்கும் இடத்தில்
இருந்தால்!
அர்த்தப்படுவது தர்க்கம் தான்..

யார் கழுத்தில் மாலையென வளைவாய்?
யாருக்கு மாலை சூடப் போகிறாய்?
யார் கையால் மாலை ஏற்கப் போகிறாய்?
தங்கமாலை கேட்பாயா?
சொந்த மாலை கேட்பாயா?
முடிவு யார்கையில்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்..

வேண்டும் என்பதை
விடுவதும் இல்லை..
வேண்டாம் என்பதை
தொடுவதும் இல்லை..

## நீ..

தொட்டுவிடும் தூரத்தில்
நீயும் இல்லை..
உன்னை விட்டுவிடும்
எண்ணத்தில்
நானும் இல்லை..

## நாம்..

காற்றில் கலந்த உயிர்களாக
எம் மனங்கள் மட்டும்
காதலால் இணைந்தன..
உயிரற்ற நடைப்பிணங்களாய் நாம்!

## எங்கள்..

இதமான இதயங்கள்
இசையாக இணைகையில்
அசையாத அன்பு
அழகாக வாழ்கையில்
ஆனந்தமாகும்
எங்கள் ஆசிகள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள்..

காசு இருந்தால் காதல்..
காசு இல்லையேல் மோதல்..
ஆனாலும் பிரிவு இல்லை..
இது உங்கள் காதல்..

## சாதனை

உனக்காகவும் எனக்காகவும்
காத்திருக்கும் வரம்..

## இலக்கு

உன்
வாழ்க்கைப் பாதையின்
கண்..

## கல்வி

நாம் தேடும்
கடவுள்..



## உண்மை

அன்றும் இன்றும் என்றும்
யாவரும் எதிர்கொள்ளும்
மரணம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியது புதியதே!



சுகந்தம் வீசி
மலர்ந்து வரும்
புதிய காலையில்
உணர்வுகள் உரைக்க
மனங்கள் தெளிய
பக்குவமாய்
தொக்கு நிக்கும் வார்த்தைகளும்
சிக்கிடாமல் உச்சரிக்க
சக்தி வேண்டும்
ரீங்காரமே!

பவ்வியமாய் கவிதை உரைத்து
செந்தணலால் தமிழ் அரைத்து
வித்திடுகிறாய் முத்தழகு காண...

பழையன காக்கப்பட
புதியன ஆக்கப்பட
விடியலின் சுயம்பரத்திற்காய்
விழிகளின் வியப்புக்கள்
இன்று புதியது!
ஆடுகின்ற ஆட்டங்கள்
போலி என
சேலி சொன்ன போதும்
பாடை ஏறும் நிலை
பாவாடை தாவணிகள்
ஜாடையிலே கிடைக்கும்
என்று அறிந்தும்
இல்லாமைக்குள்
சொல்லாமல் மூழ்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நொந்து வெந்து
துவண்ட போது மெல்ல எழுந்து
அதில் புதையுண்டு போகாமல்
தாகம் தணித்து
சிலர் வாடை வாழ அழைத்து
வாழ வந்து
புதிய நாட்கள்
புதிய சிந்தனைகள்
புதிய கண்காட்சிகள்
கடக்கையில்..
சிற்பமான சிலைகளின் உயிர் அணுவாய்
மறதியும் மனித வரம் என
ஸ்வரம் கோர்த்து
ஞானம் வழங்கும்
இனிய மாறுதல்
என்றும் புதியதே!

இன்று வந்த வாசம் புதியது
அழைத்த அனுபவம் புதியது
ஒவ்வொரு நொடியும்
எம் அறிவு அறியும்
ஆற்றலும் புதியது..

இறுதியாக கண்ட போது
சடுதியாக சாய்ந்ததனால்
இவள்...
எச்ச இலையில்
மிச்ச அமுது
கேட்கிறாய் என்ற எண்ணமா?
அப்போ இறைவனும்
முன்னோர் தொட்டு வணங்கிய
சொச்சம் என நினைப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய வரம் வேண்டி
புதியவராய் வரம் கேட்கும்
எம் நேர்த்தி
என்றும் புதியதே!!
சென்ற காலம்
தந்த காயங்கள்
வெறும் மாயங்களே!

வாடிய நினைவுகள்
தேடுகிறது தணிக்கைகளை..
இனி வாழும் காலங்கள்
வெல்லும் வாழ்க்கைகள்
எழுதும் வரலாறுகள்
என்றும் புதியதே!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்து..



சிந்து கேட்டு
சிந்திக்கும் மனிதா
சிவந்தது மண்
சிந்திய இரத்தத்தால்..

உரிமை கேட்டாய்
உணர்வை விதைத்தாய்
இரத்தம் சிந்தினாய்!

உறவு கேட்டாய்
உணர்வை விதைத்தாய்
இரத்தம் சிந்தினாய்!

உறவு கேட்டாய்
உணர்வை கூட்டினாய்
கண்ணீர் சிந்தினாய்...
சிந்துகிறாய்..

இனி..
உரமாவாய் உழைப்பாய்
உயர்வாய்
உன் உழைப்பால் வியர்வை சிந்து..
உன் வாழ்வில் கேட்கும் ராகம் சிந்து..
சொல்கிறாய் இவள் பல சிந்து
சிந்தித்தேன் நானும் ஒரு சிந்து..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசப்பட மாட்டாயா?

உச்சி முதல் பாதம் வரை
உயிருக்குள் உதிரமாய் ஓடும்
உயிரின் உயிரே...!

வார்த்தைகளில் தேனை மட்டும்
வைத்திருந்த நீ...!
இன்று விஷத்தை உமிழ்வது எதனால்?
கன்னங்களில் வழியும்
கண்ணீர் கூட - உன்
பெயரைத்தானே எழுதுகின்றன!



நினைவுக் கடலில் நீ மட்டும்
மூழ்கியிருப்பதால் சுவாசம் மட்டும்
தடையின்றி வருகிறது..

இசையின் ஸ்வரமாய் - உனது
வார்த்தைகளைக் கண்டவள் இன்று
இடியாய், மின்னலாய்
என் இதயத்தை தாக்கியது எப்படி?
எங்கே கற்றுக் கொண்டாய்
இந்த வித்தையை?

திண்ணையில் அமர்ந்த படி முற்றம்
நிரப்பும் வெள்ளத்தைப் பார்க்கையில்
நீ என் கன்னத்தை நிரப்பிய முத்தம்
நினைவிற்கு வந்து நீரோடு நனைகிறது..

காதலின் கவிதைகளில்
மௌனத்தின் வாசல் உடைய மறுத்து
உதடுகள் உண்மையை மறைத்து
வார்தைகள் தெரிந்தே தற்கொலை செய்கிறது...

மோகம் இழந்து நேசம் சுமக்கும் காதல்
வானத்தை வசமாக்கும்
வானமே வசப்படும்போது
என் அன்பே... நீ என் நேசத்தில் வசப்பட மாட்டாயா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறணை..

நினைவுகள் தான்
இனிமை தரும்
என்பது உணர்ந்தது..
கடந்த காலம்
வாழ்க்கைப் பாடம்
யாவரும்
சொன்னது..
பிறந்த காலம்
சிறந்த நேரம்
நாம்
வாழ்வதை பொறுத்தது..
வரலாறு புரட்டுகிறோம்
பிறர் வாழ்வை
திருடுகிறோம்..
நாம் வரலாறாக
நினைக்கிறோமா?

வஞ்சம் கொண்டு
வஞ்சம் தீர்க்கும்
அறணையின்
நஞ்சு வேலையும்
அறைகூடவல்
விடுத்த நாம்
இன்று
யாவையும்
மறந்தோம்..
மறந்தது போல
நடிக்கிறோம்..
அதனால்
நாம் அனைவரும்
இங்கு..
அறணைகள் தானே??





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் அவன்..

உறவுகள் தந்தவன்
வரவினை எதிர்பார்த்து
சிறகுகள் விரிக்க
பறவைகள் மறுத்தன..

கனவுகள் காண்பவர்
கதைகளை தகர்த்து
சிறைக்குள் வாழ்பவர்
புதர்களுள் புதையும் முன்
பதறுகின்ற மனங்கள்
பலம் கண்டு வாழ
எமக்காக வருபவன் யார்?

அறம் காக்க..
புறம் காட்டும்
திறன் படைத்தவர்கள்
மனம் திறக்க..
பரம் பொருள்
வரம் கொடுக்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம் இல்லை
இந்த வாழ்வின்
சுமைகள் என
வீரம் கொண்டு
துயரம் மறந்து
வைரமென மிளிர
தியாகம் செய்தவர்
கொள்கைகள் மலர
எம்மில் இருந்து
உயிர்ப்பவன் யார்?
சிலிர்க்கின்ற தோள்கள்
உணர்வினை உணர்த்த
வெறித்தோடிய வளங்கள்
புதிய துளிர் துளிர்க்க
பொறித்திட்ட வரலாறு
சிதைக்கப் படும் முன்
சித்தாந்தம் சிந்திக்க
எமக்காக சிம்மாசனம்
அமர்பவன் யார்? யார் அவன்??


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றே!

வாழ்க்கை விளையாட்டு
விளையாட்டு வாழ்க்கை..
இரண்டும் ஒன்றே என்று
விளக்கும் என் கவி உனக்கு..

விளையாட்டு வீரருக்கு
விளையாட மைதானம்
விந்தை மனிதனுக்கு
விளையாட
பூமி மைதானம்..

விளையாட்டு வாழ்க்கை என்றால்!!
உள்ளக விளையாட்டு குடும்பம்..
வெளியக விளையாட்டு சமூகம்..
இங்கே நீ
பார்வையாளனா? பங்காளனா?
சதுரங்கம் குடும்பம் என்பேன்..
வெளியரங்கம் உன் உறவு நோக்க..
பூப்பந்து உன் காதலை வாழ வைக்க..
கூடைப்பந்து சத்தியம் காக்க..
வலைப்பந்து நட்பினை வளர்க்க..
உதைபந்து எதிரியை அறிய..
கரைப்பந்து துரோகிகளை விரட்ட..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மெய்வல்லுநர் விளையாட்டு*
*தனியான வாழ்வு உனக்கு..*
*சுவட்டு நிகழ்வு*
*உன் நகழின் ஆய்வு..*
*பகட்டு வாழ்வு*
*அறியும் நாடு..*
*வாழ்வு விளையாட்டென ஒரு பார்வை..*
*பாதை மாறுவதில்லை*
*போதை ஏறுவதில்லை*
*நேரம் மீறுவதில்லை*
*தூரம் அதிகம் இல்லை*
*எல்லை விலக்குவதில்லை*

*தோல்வியை வெல்வதும்*
*மற்றவரை மதிப்பதும்*
*நாட்டின் பக்தியும்*
*வீட்டின் சித்தியும்*
*சொல்லும் விளையாட்டு*
*உன் வாழ்க்கை என்பேன்...*

*விளையாட்டை வாழ்க்கை என்று பார்*
*வாழ்வின் அதிசயம் காண்பாய்..*
*வாழ்வை விளையாட்டாக பார்*
*வாழ்வின் சுவார்சியம் காண்பாய்..*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவு பேசுகிறது..

திங்களென என்னை
மங்கலமாய் அழைக்கும்
மானிடமே!
உன் செங்கம்பள
கவி கேட்டு நானும்
புவி இறங்கினேன்...

சொற்போர் நடத்த அல்ல
சொற்பொழிவு ஆற்ற அல்ல..
செற்கோவையால்
சொற்சிலம்பு எடுத்து
உங்களுடன் பேச
சொற்ப ஆசை எனக்கு..

விண்ணைத் தொட்டு
வென்றவனும்
மண்ணை முட்டி
மாண்டவரும் இங்கே!
ஆண்டவரும் நாமே



தாண்டவரும் நாமே
என்ற மமதை உனக்கு..
வேண்டாம் இந்த வனப்பு..
தேய்ந்தாலும் வளர்ந்தாலும்
வழி மாறியதில்லை நான்..
அதனால் எனக்கு சூப்பர்மூன் விருது..

நீயும் வீழ்தாலும் தாழ்ந்தாலும்
நிலை மாறாதே!
உன் இலக்கை விட்டு விலகாதே!
உனக்கும் சாதனை விருது நிச்சயம்..
மானிடா இயற்கை பேச வேண்டும்
என்று நினைக்காதே...
பேசினால் நீ உமையாகிவிடுவாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்..

தேற்றம் இயம்பி
தோற்றம் வியந்து
மாற்றம் பயந்தது..
தேற்றம் கூற
குற்றாலம் காற்றில்
சான்று தருகிறது..

கணிதம் சொன்ன
வெல்லும் வாழ்வை
இனிதாய் இசைக்க
வாழ்வை அறிவாய்..

இரு சமாந்தரக் கோடுகளை
ஒரு குறுக்கோடு வெட்டும் போது
உருவாகும் கோணங்களின்
கூட்டுத்தொகை 180°..

ஒத்த கோணம் உன் நண்பன்
ஒன்றுவிட்ட கோணம் உன் சொந்தம்
குத்தெதிர்க் கோணம் உன் எதிரி
நேயக் கோணம் உன் காதல்..
அன்பான காதல் கூட்டினால் 180°
நண்பன் சொந்தம் எதிரி
உனக்கு எல்லோருமே சமன்..
இது உன் சாயல்
உன்னை நீ சமன்செய்
நேர்கோட்டில் பயணம் செய்..
வாழ்வில் தடுமாற்றம்
உனக்கு இல்லை..
கோணங்கள் விதி மாறுவதில்லை..

ஒரு நேர்கோடு விண்
மறு நேர்கோடு மண்
குறுக்கோடும் கோடு காற்று..
உன் வாழ்வின் மூச்சு
கணிதம் தரும் சாட்சி
இதை புரிந்து நீயும்
தேற்றம் கண்டு
ஆற்றல் பெற்று உறவை உணர்த்து..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணஜாலம்..

வண்ண வண்ண கவி யாத்து
வான வெளி விழி பார்த்து
போன உயர் வழி கோர்த்து
என் பேனா எழுதியது
வர்ணஜாலம்..
பேனா முனை மை சிந்த
வரிகள் இதமாக
கருத்துக்கள் உயிராக
எண்ணங்கள் தருகிறது ரீங்காரம்...

விதவிதமாக
தினம் தினம் நாம் பாடும்
ரணம் கணமாக
இருந்த போதும்
வருந்தாது தொடர்கிறோம்
மருந்தாக அருந்துகிறோம்
இன் நிலையை
நொருங்கி நெருங்கி
விரும்புகிறோம்..
இது எம் தமிழ்
வர்ணஜாலம்...

பருந்து வந்து
இரை என்று
சிறை தந்தது தெரிந்தும்
அதை மறந்து வாழ முனைகிறோம்..
இது எம் எதிர்கால வர்ணஜாலம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிமகனே பெரும் குடிமகனே!
பட்டிக்காட்டில்
சட்டி பானை உருட்டும்
வெறிமகனே!
கல்லில் நார் உரிக்கலாம்
நீ கள்ளில் மிதக்கும் நிலை மாற்றலாமோ?

அடிபட்டு வெடிபட்டு
உயிர் விட்டு..
மரணம் வென்று வந்தும்
சரணம் போடுகிறாய்
கள்ளுக் கொட்டிலில்..

சிரிக்க மறந்த பிள்ளைகளின் முன்
உன் குடி நடிப்பில்
பிஞ்சு நெஞ்சுகள் வெடிப்பதை
நீ அறியாயோ??

உன் தடக்குப்படும்
கெட்ட வார்த்தைகளில்
பட்டாடை கட்டிவந்து
தவிப்பதை அறியாயோ?

சாடி மூடி என்று
இறைவன் போட்ட
வாழ்க்கைக் கணக்கை
உன் சட்டையில் கூட
ஒட்டவில்லை..
பெட்டயன் என்று உனை
ஊர் அழைக்கையில்
நீ கட்டிய உடை
கரு இழப்பதை
அறியாய்..
இனியும் வேண்டாம்
மதுவின் காணம்... இதனால்
தீரும் மாதுவின் சோகம்..
மௌன ராகம் மாற்றும் வர்ணஜாலம்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கியத்துவம்

சொல் வித்தையால்
மல்யுத்தம் நடத்தத் துணிந்து
வில்வித்தை தொடுத்து
வித்தகக் கவிதை
சொல்லக் கேட்டு
மெல் எழுவாய்...

உங்களின் தனித்துவம்
வாழ்வின் மகத்துவம்..
உங்களின் தனித்துவம்..

காதல் இலட்சியம்
இரண்டில் எது முக்கியம்?
அழியாத காதலா?
அழிக்க முடியாத
இலட்சியமா?
காதல் தமிழ் போன்றது..
இலட்சியம் கணிதம் போன்றது..

காதல் தமிழ் எனக் கொண்டால்..
எம் தாய் மொழி இதுவே!
உயிரில் கலந்தும் இதுவே!
விருப்பங்கள் கேட்காமல்
விரும்புவதும் இதுவே!
ஆனால் பரீட்சையில் நூறு புள்ளி கிடைக்காதே!
முற்றுப் புள்ளி போடவில்லை என்பர்...
கம அடையாளம் காணவில்லை என்பர்..
ஒரு தவறு பெரிய விளைவு
காதலும் இது போலவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியம் கணிதமெனக் கொண்டால்!
வாழ்வில் கணக்கை கணக்காக போடுபவர்கள்
கணிதத்திலும்
கணக்கை கணக்காக போட்டால்
பிணக்கே இல்லை
நூறு புள்ளி நிச்சயம்...
இலட்சியம் வெல்லப்படுவது சாத்தியம்..
எனவே!

உங்கள் முக்கியத்துவம் இலட்சியம் எனக் கொண்டு
வெற்றி எனும் மகிமை கண்டு
வாழ்வில் சாதனை தட்டுங்கள்..
அற்றுப்போன காதலும்
உன்னை
பற்றி வரும்...

இதனால் தானா?
க.போ.த சாதாரண தர
பரீட்சையில்
கணிதம் கட்டாய பாடம் ஆனது...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் பொய் முகங்கள்..

நிரந்தரமற்ற கொள்கைகள் பேசும் எம்மவர்
பலதரப்பட்ட தொல்லைகள் உரைத்து..
விளம்பர விளக்கங்கள் தந்து..
தளம்பும் தத்துவங்கள் கூறி
சிலம்பெடுத்து மதுரையை எரித்தது சரி
என்று இங்கு வரி கேட்கும்
எம் மூதாதையர் ஆசனம் விட்டு இறங்கி
விமோசனம் கேட்க இன்றும்
தயாரில்லை..

ஆசனத்தின் சாசன வாசனை
போசனமாக இருக்கிறது போல்..
வேல் எடுத்து வாழ் எடுத்து
சூழ் உரைத்தது தப்பில்லை..
தமிழ் வேதமும் தப்பில்லை..
காலம் காலமாக தாம் வாழ
முகமூடி போட்டு அன்று
பக்கவாத்தியம் இசைத்தது மறந்து
இன்று பாக்கிஸ்தான் காஷ்மீர் போல சிலர்
நடிக்கும் நாடகம் பார்த்து
ரசிக்கும் தலையாட்டி பொம்மைகளாய் எம்மவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திவாரமே
சரிவர போடாமல்
கத்திக் கொண்டிருக்கும்
வத்திப்போனவர்கள்
வெற்றுக் காகிதத்தில்
கையொப்பம்
இட்டு எமை விற்று
முத்தியும் கேட்பர்..
இதை அறிந்து
நாமும் தெளிந்து
புதிய வழி காண
புதியவர்களாய்
தமிழ் பதிப்போம்..
புரிந்து கொள்ளுங்கள்..
எல்லாம் பொய் முகங்கள்..
எழுதுகோல் குத்தினால் ஆயுதம்
எழுதினால் மா யுகம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிட்டதாயின் வெட்டன மற...

சுட்டிக்காட்டும் ரீங்காரம்
எட்டிப்பார்க்கும் அகங்காரத்தை
தட்டித் தீர்க்கும் சங்காரம்.

எட்டாப்பழம் புளிக்கும்
தொட்டால் நெருப்பு சுடும்
பட்டால் ரணங்கள் துளைக்கும்
விட்டால் அம்பு பாயும்.

தெரியும் பலர் விருந்து என்று
காதல் மருந்தை அருந்தி வருந்துவர்..
வலிகள் நினைக்க நினைக்க
சுகமானது என்று பதமாக உரைத்திடுவர்..

அப்படியானால்!
காதலில் அடிபட்டு
வலிகளால் மெலிந்தவர்கள்
காதல் காதல் இல்லையா?
இல்லை என்றால் இழுக்காதே!
தொல்லை என்றால் தொலையாதே!
அல்லல் என்றால் அலையாதே!
எமக்கு நாமே பிணக்கு ஆனது நிஜம்
கிடைக்காது என்ற கிடக்கைகளுக்காக
கிளர்ந்தெழுந்து கண்டது
மறுபடியும் கிணறுகள்தான்..
ஆசைப்படுவதும் வீசப்படுவதும்
வழமையானதால்!
முன்னோர் பாடிய
சுவடிகள் தரும் பாடங்களுக்கு
கட்டுப்பட மனதை மட்டுப்படுத்து..
கிட்டதாயின் வெட்டென மற..
பட்டன முடிவெடு..
சட்டென்று மகிழ்வு சங்கமிக்கும்..
ஏனெனில் மரணமும் இப்படித்தான் மானிடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறப்பதற்கா மாறுதல்கள்..

தொலைவதற்கா இங்கே தேடல்கள்
இல்லை
தொலைந்த வாழ்வு புதையாமல்
காப்பதற்கே இந்த தொழுகைகள்
அழிப்பதற்கா இங்கே ஆக்கங்கள்?
இல்லை
அடையாளங்கள் அகப்படக் கூடாது
என்பதற்காகவே இந்த மறைப்புக்கள்
சிரிப்பதற்கா இங்கே நகரங்கள்?
இல்லை
எம் சந்ததிகள் சிகரம் தொடவே இந்த
சங்கதிகள்..
சுய நலத்திற்கா இங்கே கூடடிப்புக்கள்?
இல்லை
சுயம் விளங்கவே இந்த வாயடைப்புக்கள்..
குற்றத்திற்கா இங்கே தண்டனைகள்?
இல்லை
குற்றாலம் இங்கேயும் பாய்வதற்கே
இந்த மௌனங்கள்..
சுவடுகள் இருந்தாலா அடையாளம் காக்கப்படும்?
இல்லை
சுமுக நிலை இருந்தால்தான்
சுயம்பரம் தமிழ் காணும்..
நாம் என்ன அழிந்தா போனோம்?
எமக்கான அடையாளத்தை
சாதித்து உலகை வென்று உறுதிப்படுத்துவோம்..
மறப்பதற்கா இந்த மாறுதல்கள்?
இல்லை வளர்வதற்கே இந்த ஆறுதல்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம் நிலை நிமிர
ஊற்று...
தமிழ் நேற்று பார்த்த
கதை மாற்ற
பறை சாற்ற
ரீங்காரக் கவிக் கீற்று...
உனை ஆற்ற
வரும் நாற்று...
நீயும் வா
சாதனை நிலை ஏற்று...
ஓயாமல் தடையின்றி
உன் உயிராக
தொடரும்
வைகறை வரிகள்
கவிக்காற்று.....

என்றும் அன்புடன்
உங்கள் தோழி
வி. டிவனியா நிருஜினி மான்ன் (B.B.A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org